செ.வெ.எண்: 28 / மார்ச் நாள்: 16.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து திருமணம் மண்டபம் மற்றும் தங்கும் விடுதிகளின் உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 15.03.2016 அன்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து திருமணம் மண்டபம் மற்றும் தங்கும் விடுதிகளின் உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள காலங்களில் திருமணம் மண்டபம் மற்றும் தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள், இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமாகும். திருமண மண்டப உரிமையாளர்கள், மண்டபங்களில் திருமண விழா / காதணி விழா போன்ற ஏதாவதொரு விழா நடத்துவது போன்ற தோற்றத்தை உருவாக்கி அவ்விழாவில் அதிகளவில் கூட்டத்தைக் கூட்டி பரிசு பொருட்கள் மற்றும் இலவச பொருட்கள் விநியோகிப்பது போன்ற நிகழ்வுகளை தடுத்திட ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். விசேஷ நிகழ்ச்சிகளுக்காக திருமண மண்டபங்களை பதிவு செய்ய வரும் நபர்களின் உண்மைத் தன்மையினை ஆராய்ந்து அனுமதி வழங்கிட வேண்டும். சந்தேகம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலருக்கோ அல்லது பறக்கும் படை குழுவினருக்கோ அல்லது தேர்தல் கட்டுப்பாட்டு அறையினைத் தொடர்பு கொண்டோ புகார் தெரிவித்திட வேண்டும்.

தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் தங்களது விடுதிகளில் தங்கியிருக்கும் நபர்களை சந்திக்க அரசியல் கட்சி பிரமுகர்களின் வருகை அதிகளவில் இருந்தாலோ அல்லது பணப்பரிமாற்றம் ஏதேனும் நிகழ்வதாக சந்தேகப்படும்படியான சூழ்நிலை இருக்கும் பட்சத்தில் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலருக்கோ அல்லது பறக்கும் படை குழுவினருக்கோ அல்லது தேர்தல் கட்டுப்பாட்டு அறையினைத் தொடர்பு கொண்டோ புகார் தெரிவித்திட வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள விதிமுறைகளை மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தங்கும் விடுதி மற்றும் திருமணம் மண்டபம் உரிமையாளர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள், மாவட்டத்திலுள்ள திருமண மண்டபம் மற்றும் தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**